1973 டிசம்பர் 4]

ஆபத்து அல்லது சேதம் விளைவிக்கும் சமுதாய விரோதிகளின்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒத்தாசை செய்ய பொது மக்கள் இல்லாவிட்டாலும் பொதுமக்களின் அரசாக இருக்கிற நம் அரசு கடுமையான நடவடிக்கைகளை இனிமேலாவது எடுக்க முன்வருமா?

(முற்பகல் 9.30)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பழமொழி என்னவோ எனக்குத் தெரியாது. இன்றைக்குப் பொது சொத்துக்களைச் சேதப்படுத்துவது புது மொழியாகிவிட்டது.

திரு. எம். ஏ. லத்தீப் : இவ்வாறு பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தும்பொழுது மக்களுடைய வரிப்பணம் தான் அதிலே நஷ்டமாகிறது. எங்கே பொதுச்சொத்துக்கள் குறிப்பிட்ட இடங்களில் நஷ்டப்படுத்தப்படுகின்றனவோ அந்த இடங்களைக் குறிப்பிட்டு, அந்த இடங்களில் ப்யூனிடிவ் டாக்ஸ் போடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய யோசனை எதுவுமில்லை.

திருச்செந்தூரில் பெண்கள் கல்லூரி

***625 வினா—திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்செந்தூரிலுள்ள அருள்திரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து அங்கு பெண்களுக்கென தனியே ஒரு கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

கங்கைகொண்ட சோழபுரம் கோயில் திருப்பணி

***626 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கங்கைகொண்ட சோழபுரம் கோயிலைப் புதுப்பிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம். உள்ளது.